(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 63 ]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, சனவரி 20, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0608 / '08

1.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2001 ஆம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கம் அரச வங்கிகளிலிருந்து பெற்றுக்கொண்டிருந்த கடன் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி கடன்தொகை பெற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆட்சி பீடமேறிய அரசாங்கம் அரச வங்கிகளிலிருந்து ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கடன் தொகைகளை முழுமையாக மீளச் செலுத்தியதா என்பதையும்,

(ii) இல்லையெனில், மேற்படி அரசாங்கத்தின் காலத்தில் செலுத்தப்படாமல் எஞ்சியிருந்த வங்கிக் கடன் தொகை யாதென்பதையும்,

(iii) 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் மூலம் ஆட்சிக்கு வந்த அரசாங்கம், 2004 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரச வங்கிகளிலிருந்து பெற்றுக்கொண்ட கடன் தொகைகள் ஒவ்வொரு வருடத்திற்கேற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0644 / ' 08

2.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தமிழ் மக்களின் தனித்துவமானதொரு மருத்துவ முறையாகிய சுதேச சித்த வைத்திய முறைக்குரிய மருத்துவர்கள் எத்தனைபேர் தற்போது அரசாங்க வைத்தியசாலைகளில் (மாகாண சுகாதார சேவையும் அடங்கலாக) பணியாற்றுகின்றனர்,

(ii) அவ்வைத்தியசாலைகள் யாவை,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மீளாய்வுகளின் மூலம் இனங்காணப்பட்டவாறு மேற்படி சித்த மருத்துவர்கள் எத்தனைபேர் அரசாங்க வைத்தியசாலைக்கு (மாகாண சுகாதார சேவை அடங்கலாக) தேவைப்படுகின்றனர்,

(ii) தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்கின்ற இனங்காணப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்குத் தேவையான சித்த மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா,

(iii) பாதுகாப்புப் பிரிவினரால் விடுவிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் அடங்கலாக சகல பிரதேசங்களுக்கும் சித்த மருத்துவர்களை நியமிப்பதற்கு எவ்வளவு காலவரையறைக்குள் நடவடிக்கை எடுக்கப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0645 / '08

3.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) முஸ்லிம் மக்களுக்கு தனிச்சிறப்புடையதான சுதேச மருத்துவ சிகிச்சை முறையான யுனானி மருத்துவர்கள் எத்தனை பேர் தற்போது (மாகாண சுகாதார சேவை அடங்கலாக) அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றி வருகிறார்கள் என்பதை சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகளின் விபரங்களுடன் அவர் இச் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) ஆய்வொன்று மூலமாக இனங்காணப்பட்ட வகையில் தேவைப்படுகின்ற யுனானி மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 23 பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே முஸ்லிம் மக்கள் செறிவாக வசிப்பதாக இனங்காணப்பட்டுள்ளமையால் தேவைப்படுகின்ற யுனானி மருத்துவர்களின் எண்ணிக்கை 23 பேர்கள் என்பதையும்,

(ii) சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய மூவினங்களும் கிட்டத்தட்ட சமமாக வசிக்கின்ற ஒருசில பிரதேச செயலகங்களுக்காக ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி மருத்துவர்கள் மூவர் தேவையென்பதையும்,

(iii) முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் ஒருசில பிரதேசங்களில் மருத்துவ நிலையங்களுக்குக்கூட (உதாரணமாக மட்டக்களப்பு) யுனானி மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லையென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) மருத்துவக் கல்லூரியிலிருந்து வருடந்தோறும் சித்தியடைகின்ற யுனானி மருத்துவர்களுக்குத் தொழில் வழங்கி முஸ்லிம் நோயாளிகளுக்கு அவசியமான சிகிச்சைகளை வழங்க எவ்வளவு காலப்பகுதிக்குள் நடவடிக்கை மேற்கொள்வா ரென்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0837 / '08

4.

கௌரவ திலகரத்ன வித்தானாச்சி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி போப்பே — போத்தல பிரதேச சபைக்கான அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள முன்பள்ளிகளின் எண்ணிக்கை எத்தனை,

(ii) மேற்படி முன்பள்ளிகளின் பெயர்கள், முகவரிகள், முன்பள்ளி ஆசிரியர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை,

(iii) ஒவ்வொரு பாடசாலையிலும் கல்வி பயில்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கை எத்தனை ,

என்பவற்றை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இப்பிரதேச சபையினால் நிருவாகம் செய்யப்படுகின்ற முன்பள்ளிகளின் எண்ணிக்கை எத்தனை,

(ii) பெயர் வாரியாக அவைகள் யாவை,

(iii) மேற்படி ஒவ்வொரு முன்பள்ளிக்காகவும் சபையினால் செலவிடப்படுகின்ற மாதாந்த தொகை எவ்வளவு,

(iv) உரிய பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்படாத முன்பள்ளிகளை சபை நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் வேலைத்திட்டம் உள்ளதா

என்பவற்றை அவர் இச் சபைக்கு கூறுவாரா?

(இ) (i) தனியார் முன்பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் அரசினால் விதந்துரைக்கப்பட்ட பயிற்சியினைப் பெற்றுள்ளனரா என்பதை ஆராயும் பொருட்டு மீளாய்வு நடத்தப்பட்டுள்ளதா,

(ii) முறையான பயிற்சி வேலைத் திட்டமொன்றின் மூலம் மேற்படி ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக எத்தகைய கால எல்லைக்குள் நடவடிக்கை எடுக்கப்படும்,

(iii) தனியார் முன்பள்ளிகளுக்குத் தேவையான பௌதிக வளங்களை சபையின் மூலம் பெற்றுக்கொடுப்பதற்கு முடியாவிட்டால், பிற ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு இந்த முன்பள்ளிகளையும் சபையின் கட்டுப்பாட்டுக்குள் எவ்வளவு கால எல்லைக்குள் கொண்டுவரப்படும்

என்பவற்றை அவர் குறிப்படுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0692 / ' 08

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைவரைக்குமான கடந்த 5 வருடங்களில் —

(i) நாட்டின் மொத்த சனத்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி சனத்தொகையின் மதம்சார்ந்த உட்கூறுகள் எவ்வாறு உள்ளது என்பதையும்,

(iii) மேற்படி சனத்தொகையின் இனம் சார்ந்த உட்கூறுகள் எவ்வாறு உள்ளது என்பதையும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இச்சனத்தொகையில் கடந்த 4 வருடங்களுக்கான பின்வரும் வயதுக் குழுவினருக்கான சனத்தொகை எவ்வளவு என்பதை தனித்தனியாக அவர் தெரிவிப்பாரா?

0—20 வயது

20—40 வயது

40—60 வயது

60 இற்குமேல்

(இ) இன்றேல், ஏன்?

0693 / ' 08

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 10 வருடங்களுக்கான —

(i) நாட்டின் மொத்த தொழிற்படை எவ்வளவு என்பதையும்,

(ii) அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த தொழிற்படையினர் எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்,

(iii) ஆயுதப்படையினர், பொலிஸ், துணைப்படையினர் மற்றும் ஏனையோர் என்றவகையில் பொதுத்துறை தொழிற்படையின் பங்குபற்றுதல்கள் எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்,

(iv) மேற்படி வினா (i), (ii) ஆகியவற்றின் பிரகாரம் நாட்டிற்கு ஏற்படும் மொத்த செலவு (மொத்த சம்பளம்) எவ்வளவு என்பதையும்

வருடாந்த அடிப்படையில் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i), (அ)(ii) இன் பிரகாரம் ஓய்வூதியத்திற்கான மொத்த செலவு எவ்வளவு என்பதையும், அடுத்த 15 வருடங்களுக்கு ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு எவ்வளவு தேவை என்பதையும்,

(ii) மேற்படி (அ) (iii) இன் பிரகாரம் அமய ஊழியர்கள் அல்லது உறுதிப்படுத்தப்படாத ஊழியர்களின் எண்ணிக்கை என்ன என்பதை தனித் தனியாகவும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0694 / '08

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பனவற்றின் கடந்த 05 வருடங்களுக்கான இலாபங்களை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) வருடாந்த அடிப்படையில் கடந்த 04 வருடங்களுக்கான —

(i) ஒவ்வொரு வங்கியினதும் தேறிய சொத்தின் பெறுமதி,

(ii) அறவிட முடியாத கடன்களென்று பதிவழிக்கப்பட்ட ஐயக் கடன்களுக்கென ஒவ்வொரு வங்கியாலும் ஏற்பாடு செய்யப்பட்ட தொகை,

(iii) அறவிட முடியாக் கடன்களுக்கான வாடிக்கையாளர்களின் பெயர்கள்

என்பனவற்றை அவர் தெரிவிப்பாரா?

(இ) வருடாந்த அடிப்படையில் கடந்த 05 வருடங்களுக்கான ஒவ்வொரு வங்கிக்குமான —

(i) படுகடன்களுக்கான தேறிய கிரயம்,

(ii) ஈட்டல்களுக்கான கிரயம் மற்றும் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை

என்பவற்றையும் அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0715 / '08

8.

கௌரவ பேமசிறி மானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008.07.09 ஆம் திகதியன்று இலங்கை மத்திய போக்குவரத்து சபையும் புகையிரத திணைக்களமும் பயணிகள் போக்குவரத்தின் மூலமாக ஈட்டிய வருமானம் எவ்வளவென்பதையும்,

(ii) அன்று பயணிகள் போக்குவரத்துக்காக இலங்கை மத்திய போக்குவரத்து சபையும் புகையிரத திணைக்களமும் செலவிட்ட தொகை எவ்வள வென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2008.07.10 ஆம் திகதியன்று இலங்கை மத்திய போக்குவரத்து சபையும் புகையிரத திணைக்களமும் பயணிகள் போக்குவரத்தின் மூலமாக ஈட்டிய வருமானம் எவ்வளவென்பதையும்,

(ii) அன்று பயணிகள் போக்குவரத்துக்காக இலங்கை மத்திய போக்குவரத்து சபையும் புகையிரத திணைக்களமும் செலவிட்ட தொகை எவ்வள வென்பதையும் ,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0733 / ' 08

9.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1994 ஆம் ஆண்டில் இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமாக இருந்த குளிரறைகளின் எண்ணிக்கை எத்தனை,

(ii) 2008 ஆம் ஆண்டு யூன் மாதமளவில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான தொழிற்படும் குளிரறைகளின் எண்ணிக்கை எத்தனை,

(iii) குளிரறைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா,

(iv) அவ்வாறாயின் அவற்றின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குளிரறைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளவர்களின் பெயர் மற்றும் முகவரி யாவை,

(ii) தனியார்துறையினால் நடத்தப்படும் குளிரறைகளின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0734 / ' 08

10.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'நாரா' நிறுவனத்துக்குச் சொந்தமான 'சயுறி' கப்பல் மற்றும் அதில் பொருத்தப்பட்டிருந்த நீர்மானி உபகரணங்களின் காப்புறுதித் தொகை எவ்வளவு,

(ii) 'சயுறி' கப்பல் மற்றும் 'நீர்மானி' உபகரணங்கள் சுனாமியினால் அழிந்ததன் பின்பு கிடைத்த காப்புறுதி இழப்பீட்டுத்தொகை எவ்வளவு,

(iii) 'நாரா' நிறுவனத்தின் சொத்துக்களில் கப்பலின் பெறுமதி எத்தனை வீதம்,

(iv) கப்பல் காப்புறுதி செய்யப்பட்டது முதல், இழப்பீட்டைப் பெறும்வரையிலான செயற்பாடு தொடர்பாக அமைச்சு விசாரணையொன்றை நடாத்தியுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0747 / '08

11.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) சேனை விவசாயி இன்று மிகவும் அநாதரவான நிலைக்கு உள்ளாகி, வாழ முடியாமல் உயிரை மாய்த்துக்கொள்ளும் நிலைக்குள்ளாகியுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இன்று சேனை விவசாயி ஒரு மூடை உரத்தை ரூபா 6000 விலையில் கொள்வனவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளார் என்பதையும் மரக்கறி வகைகளுக்கு பயன்படுத்தப்படும் அனைத்து இரசாயன மருந்துகளின் விலைகளும் மிகவும் அதிகரித்துள்ளது என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இன்று நாட்டுக்குத் தேவையான மரக்கறிகளில் 60% மானவற்றை சேனை விவசாயிகளே வழங்கி வருவதனால் அவர்களுக்கும் 50 கிலோ உரமூடையொன்றை ரூ. 350 வுக்கும் ஏனைய இரசாயன மருந்து வகைகளை அதற்கு சமமான விலைகளிலும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறு எனின், அது எப்போது தொடக்கம் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0772 / '08

12.

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் , பேமடுவ, இலக்கம் 26 இல் வதியும் திருமதி எஸ். ஏ. சுமித்ரா குமாரி சூரசேன அநுராதபுரம் வலையக் கல்வி காரியாலயத்தில் 2007.04.27 ஆம் திகதியன்று நடைபெற்ற 2007 – தொண்டர் ஆசிரியர்களை சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளாரென்பதையும்,

(ii) அவர் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2005 வரை தந்திரிமலை, அ/கிம்புல் வெவ

ஆனந்த வித்தியாலயத்தில் தொண்டர் ஆசிரியையாக சேவையாற்றியுள்ளா ரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திருமதி சூரசேன மேற்படி பதவிக்கான அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இவருக்கு தொண்டர் ஆசிரியர் பதவி வழங்குவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0892/ '08

13.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பஸ்பயணப்பாதை இல. 341 மஹரகம — பிலியந்தலை வீதியை விஸ்தரித்து அபிவீருத்தி செய்வதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மஹரகம தேர்தல் தொகுதி முடிவடையும் இடத்தில் வேலைகள் நிறுத்தப்பட்டிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) வேலைகள் நிறுத்தப்பட்டிருக்கும் இடத்திலிருந்து பிலியந்தலை வரையான பாதையை விஸ்தரித்து அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) இந்த வீதியின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியையும்,

(ii) வீதியின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்ட திகதியையும்,

(iii) வீதி அபிவிருத்திப் பணிகள் இன்னும் எவ்வளவு தூரத்திற்கு மீதியாக உள்ளது என்பதையும்,

(iv) வீதியின் அந்த எஞ்சிய தூரம் அபிவிருத்தி செய்யப்படாமைக்கான காரணத்தையம்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0895/'08

14.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நம்பிக்கைப் பொறுப்பாளர் நாயகத்தின் கீழ் இருந்த தும்போவில, வேவல, சைமண்டேல் வத்த என்று அழைக்கப்படும் காணியின் மொத்த பரப்பளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணியில் ஏதேனுமோர் காரணத்துக்காக ஏதேனுமோர் வகையில் வழங்கப்பட்டிருப்பின் அதன் பரப்பளவு எவ்வளவு என்பதையும்,

(iii) அது எவருக்கு எதற்காக எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(iv) அது வழங்கப்பட்ட திகதி மற்றும் எவ்வளவு காலத்துக்கு வழங்கப்பட்டது என்பதையும்,

(v) அவ்வாறு வழங்கப்பட்டதன் பின் தற்போது மீதியாக உள்ள காணியின் அளவு எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பாளர் நாயகத்தின் கீழ் உள்ள இந்த அரச காணியை எவரேனுமோர் தரப்பினருக்கு விற்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0899/ '08

15.

கௌரவ லக்ஷமன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை போக்குவரத்துச் சபைக்கு (இ.போ.ச) உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்கையில் கடந்த காலத்தில் பாரிய அளவில் ஊழல்களும் மோசடிகளும் நிகழ்ந்துள்ளதாக சம்பந்தப்பட்ட அமைச்சர் குறிப்பிட்டதாக 2008 செப்ரெம்பர் மாதம் 03 ஆந் தேதிய "திவயின" செய்தித்தாளில் பிரசுரமாகி இருந்ததென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) ஒருசில டிப்போ முகாமையாளர்களும் பிராந்திய முகாமையாளர்களும் உதிரிப்பாக வியாபாரிகளுடன் கொடுக்கல் - வாங்கல்களில் ஈடுபட்டிருந்ததாக கூறியுள்ளாரென்பதையும்,

(ii) வழங்குநரொருவரிடமிருந்து 1.4 மில்லியன் ரூபா தொகைக்கான பண்டங்களை இலங்கை போக்குவரத்துச் சபை (இ.போ.ச) கொள்வனவு செய்திருந்தபோதிலும் 82 மில்லியன் ரூபாவுக்கான பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டமைக்கான ஆவணங்கள் இருந்தமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்ததென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(இ) ஆமெனில் மேலே குறிப்பிடப்பட்ட ஊழல் மற்றும் மோசடிகளுடன் தொடர்புடைய டிப்போ முகாமையாளர்களும் பிராந்திய முகாமையளர்களும் யாவரென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மேற்படி டிப்போ முகாமையாளர்கள் மற்றும் பிராந்திய முகாமையாளர்கள் தொடர்பில் மேற்கொள்ளபட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும்

2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,—

1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம்

திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 4(8) ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உப தவிசாளரினதும் சம்பளம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உப தவிசாளர்</u>**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 50,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 62,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் ஆணைக்குழுவின் உப தவிசாளர் பதவியில் பணியாற்றியுள்ள பேராசிரியர் லால் பெரேரா அவர்களுக்கும் தற்போது அப்பதவியை வகித்துவரும் கலாநிதி ஜீ. டி. குணவர்தன அவர்களுக்கும் இச்சம்பள அதிகரிப்பு ஏற்புடையாதாக வேண்டுமெனவும், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உப தவிசாளருக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 2

2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 22302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பண்டகசாலை வெடிபொருட்கள் முற்பணக்கணக்கு" — இலங்கை கடற்படை என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 345,000,000 இலிருந்து ரூபா 420,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **III** இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **IV** இல் குறித்துரைக் கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை ரூபா 200,000,000 இலிருந்து ரூபா 275,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் **V** இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2008.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.11.05

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தம்) சட்டமூலம்—பரிசீலனை.

*9.

ரணவிரு சேவா அதிகாரசபை (திருத்தம்) சட்டமூலம்—இரண்டாம் மதிப்பீடு.

*10.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ``2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*14.

விலங்குகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*19.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*22.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*23.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*24.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*25.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின்

தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*31.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ``(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*32.

